# ஆப்பிள் ஹெல்த்(Apple Health) தகுதி - COVID-19 பற்றிய அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

1. **COVID-19 தொற்றுநோய் காலத்தில் எனது Apple Health (Medicaid) காப்பீட்டை இழக்கும் அபாயம் எனக்கு உள்ளதா?**

   ஹெல்த் கேர் ஆணையம் (HCA) மற்றும் அதன் கூட்டாளர்கள் ஆப்பிள் ஹெல்த் (Apple Health) பெறுநர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்குவதை நிறுத்துவார்கள், பின்வருவனவற்றைத் தவிர:

   - ஒருவர் முடிவுறுதலைக் கோருகிறார்;
   - அவர் வாஷிங்டன் மாநிலத்தில் இனி வசிக்க மாட்டார்; அல்லது
   - அவர் இறந்துவிட்டார்

2. **எனது கவரேஜ் புதுப்பிக்கப்படாததால் மூடப்பட்டதாக நான் ஒரு கடிதத்தைப் பெற்றேன். என் கவரேஜை மீண்டும் எவ்வாறு செயலாக்குவது?**

   உங்கள் சுகாதார பராமரிப்புக் கவரேஜ் புதுப்பிக்கப்படாததால் மூடப்பிட்டிருந்தால், HCA தகுதி ஊழியர் அதனை மீண்டும் நிலையில் வைப்பார். இதனை உறுதிபடுத்தும் ஒரு கடிதத்தை நீங்கள் பெறுவீர்கள். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது உங்கள் கவரேஜ் மீண்டும் செயலாக்கப்படவில்லை எனில், 1-800-562-3022 என்ற எண்ணில் அழைக்கவும்.

3. **ான் முன்பு கோரிய கவரேஜுக்காக இன்னும் சரிபார்ப்பை வழங்க வேண்டுமா?**

   COVID-19 காரணமாக உங்களால் வருமானச் சான்றை அனுப்ப முடியவில்லை எனில், பிப்ரவரி 2020 இல் இருந்து தொடங்கி COVID-19 ஆல் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாதத்திற்கும் முந்தைய கவரேஜைப் பாதிக்கும் தகுதிக்கு சுயமாகக் கையெழுத்திடப்பட்ட வருமானத்தை HCA ஏற்கும்.

4. **HCA அல்லது சமூக மற்றும் சுகாதார சேவைகள் துறை (DSHS) தகவல்கள் நீட்டிப்புக்கு நான் கோரிக்கையிடலாமா?**

   ஆம். கோரப்பட்ட தகவல்களை வழங்க நாங்கள் கூடுதலாக 30 நாட்களை வழங்குகிறோம். நீங்கள் HCA ஐ 1-800-562-3022 என்ற எண்ணிலும் அல்லது DSHS ஐ 1-877-501-2233 என்ற எண்ணிலும் அழைக்கலாம்.

5. **அறிக்கை மாற்றுதல் இன்னும் தேவையா?**

   ஆம். நீங்கள் இனியும் வருமானம் பெறவில்லை அல்லது வேலையில் இருந்து வேலையில்லாமைக்குச் சென்று வருமான பெறவில்லை எனில், இந்த மாற்றத்தை நீங்கள் உங்கள் விண்ணப்பத்தில் புதிப்பித்து மாற்றத்தைத் தெரிவிக்க வேண்டும்.

6. **ான் தற்போது ஆப்பிள் ஹெல்த் (Apple Health) கவரேஜைப் பெற்று வருகிறேன் மற்றும் இப்போது கர்ப்பமாக உள்ளேன். நான் எனது கர்ப்பத்தைத் தெரிவிக்க வேண்டுமா?**

   ஆம். உங்கள் கர்ப்பத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

7. **நான் ஏற்கனவே ஆப்பிள் ஹெல்த் (Apple Health) கவரேஜைப் பெற்று வருகிறேன்; நான் எனது வேலையில்லா வருமானத்தை அல்லது கூடுதல் வாராத்திர $600 வேலையில்லா நன்மையைத் தெரிவித்தாக வேண்டுமா?**

இல்லை, நீங்கள் தற்போது ஆப்பில் ஹெல்த்தைப் (Apple Health) பெற்று வருகிறீர்கள் எனில் இந்த வருமானத்தைத் தெரிவிக்க வேண்டாம்.

8. **நான் கூடுதல் வாராந்திர $600 வேலையில்லா நன்மையைப் பெறுவேனா?**

ஆம், பெரும்பாலான வேலையில்லாவர்கள் கூடுதல் வாராந்திர நன்மையைப் பெறுவார்கள். மேலும் தகவல்களுக்கு, WA Employment Security Department ஆல் வழங்கப்பட்ட அ.கே.கே ஐப் பார்வையிடவும்.

9. **நான் கூடுதல் வாராந்திர $600 வேலையில்லா நன்மையை எப்போதிலிருந்து பெறுவேன்?**

வாஷிங்டன் மாநிலம் 4/20/2020 இல் இருந்து தொடங்கி இந்த வருமானத்தை விநியோக்கிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு, WA Employment Security Department ஆல் வழங்கப்பட்ட அ.கே.கே ஐப் பார்வையிடவும்.

10. **நான் எனது கூட்டாட்சி ஊக்கமளிக்கும் காசோலையைப் பெற்றேன். நான் இந்த வருமானத்தைத் தெரிவிக்க வேண்டுமா?**

இல்லை, உங்கள் ஊக்கக் காசோலையை வாஷிங்டன் ஹெல்த்பிளான்ஃபைன்டரிடம் தெரிவிக்க வேண்டாம். ஆப்பில் ஹெல்த்திற்கு ஊக்கத் தொகை கணக்கிடப்படாது.

11. **எனது ஊக்கத் தொகை நான் எதிர்பார்த்ததை விடக் குறைவாக உள்ளது. நான் என்ன செய்வது?**

உங்கள் ஊக்கக் காசோலைப் பற்றிய கேள்விகளுக்கு உள்நாட்டு வருவாய் சேவை (IRS) வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

12. **நான் இன்னும் எனது குழந்தைகள் சுகாதாரக் காப்பீட்டுத் திட்ட (CHIP) பிரீமியம் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமா?**

நீங்கள் COVID-19 ஆல் பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் CHIP இருப்புகள் தள்ளுபடி செய்யப்படலாம், ஒருவேளை நீங்கள்:

- உங்கள் CHIP பிரீமியங்களைச் செலுத்த முடியாவிட்டால்; அல்லது
- CHIP பிரீமியம் பேமெண்ட்டுகளின் உரிய காலத்தைக் கடந்து விட்டதால் CHIP-ற்குத் தற்போது தகுதி பெறவில்லை

13. **குறைபாடுகள் கொண்ட பணியாளர்களுக்கான ஆப்பிள் ஹெல்த் (Apple Health) (HWD) கீழ் நான் கவரேஜ் பெறுகிறேன். நான் இன்னும் தகுதி பெற்றுள்ளேனா?**

நீங்கள் HWD பெற்று வருகிறீர்கள் மற்றும் வருமானம் குறைந்தது, உங்கள் வேலையை இழந்துவிட்டீர்கள் அல்லது தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தால், நீங்கள் தொடர்ந்து கவரேகைப் பெறலாம் மற்றும் உங்கள் பிரீமியங்கள் தள்ளுபடி செய்யப்படும்:

- 1-800-871-9275 என்ற எண்ணில் அழைக்கவும்
- நீங்கள் நீண்ட கால சேவைகள் மற்றும் ஆதரவுகளையும் (LTSS) பெறுகிறீர்கள் எனில், DSHS வயதானோர் மற்றும் நீண்டகால ஆதரவு நிர்வாகம் (ALTSA) இணையத்தளத்திற்குச் சென்று உங்கள் பொது நன்மை நிபுணரைத் (PBS) தொடர்பு கொள்ளவும்.

**14. நான் வாஷிங்டனில் வசிக்கவில்லை ஆனால் இங்கு பயணித்து வந்தேன், மேலும் இப்போது நோய்வாய்ப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டேன். COVID-19 சோதனைக்காகவும் மற்றும்/அல்லது சிகிச்சைக்காக ஆப்பிள் ஹெல்த்திற்கு (Apple Health) விண்ணப்பிக்கலாமா?**

நீங்கள் வாஷிங்டன் மாநிலத்தில் தனிமைப்பட்டிருந்தால், COVID-19 கான கவரேஜ் மற்றும் சிகிச்சைக்குத் தகுதிபெறலாம். மேலும் தகவலுக்கு HCA ஐ 1-800-562-3022 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**15. நான் DSHS மூலம் கவரெஜ் பெறுகிறேன் அதனால் வருமானச் சான்று அல்லது வங்கி அறிக்கைகளை வழங்க வேண்டியுள்ளது. நான் இந்தத் தகவலைக் காகித்திலும் கூட வழங்க வேண்டுமா?**

இல்லை, ஆனால் மாற்றத்திற்காக விண்ணப்பிக்கும், புதுப்பிக்கும் அல்லது தெரிவிக்கும் போது உங்கள் வருமானம் மற்றும் வளங்களைச் சுயமாக கையெழுத்திடலாம். உங்கள் தகவலைத் தெரிவிக்க நீங்கள் DSHS ஐ 1-877-501-2233 என்ற எண்ணில் அழைக்கலாம்.

**16. நான் பயணித்து வரும் வழியில் ஓரிடத்தில் COVID-19 பரிசோதனை செய்யப்பட்டது மற்றும் AEM கவரேஜ்க்காக விண்ணப்பிக்கப்பட்டது. நான் என்ன ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்?**

ஒவ்வொரு சோதனைத் தளமும் வெவ்வேறு ஆவணத்தை வழங்கும். COVID-19 பரிசோதனை செய்யப்பட்டதற்காக நீங்கள் பெற்ற காகித வேலையை வழங்கவும். நீங்கள் எந்த விளக்கப்படம் மற்றும்/அல்லது சோதனைக் குறிப்புகளையும் நீங்கள் வழங்க வேண்டும். உங்கள் சோதனைக்காக உங்கள் வழங்குநரிடம் இருந்து பெற்ற எந்த ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.